கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஜனவரி-பெப்ரவரி 2018)

# HC/S 3113 Hindu Architecture

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி-II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி–I

01. தமிழகக் கோயிற் கட்டடக் கலையை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

    (i) கோயிற் கட்டடக் கலையின் தோற்றம் (ஆரம்பகால அமைப்பு)
    (ii) கோயிற் கட்டடத் தொகுதியின் பிரதான சிகரத்துடன் கூடிய கட்டட அமைப்பினை வரைபடம்மூலம் விளக்குக.

02. தமிழகத்தில் பல்லவ மன்னர்களின் ஆட்சிக்காலம் கட்டடக் கலை மரபில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது என்பதனை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

    (i) இரதக் கோயில்க்ளும், மண்டபங்களும்
    (ii) கற்றளிக் கோயில்களும், கட்டுமானக் கோயில்களும்

03. தமிழ் நாட்டு நகரங்களில் நாயக்க மன்னர்களின் ஆட்சி இந்து சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளை கண்டுள்ளது. இக்கூற்றை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

    (i) நாயக்க ஆட்சியில் தமிழகம்
    (ii) மதுரை நகரின் திருப்பணிகளுள் கட்டடக் கலை.

## பகுதி–II

04. மௌரியப் பேரரசர் காலத்தில் இந்துக் கட்டடக்கலை பெற்றிருந்த உன்னத நிலையின்னை ஆராய்க.

05. "தொழில்நுட்பங்கள் ஏதும் வளர்ந்திராத, ஆயிரம் ஆண்டுகளுக்குமுன், கட்டப்பட்ட தஞ்சைப் பெருங்கோயில், பொறியியலின் மாபெரும் சாதனையாகும்." ஆராய்க.

06. சாளுக்கிய மன்னர்களது கட்டடக் கலைப் பாணி பற்றி பரிசீலிக்குக.

07. "விஜய நகர மன்னர்கள் ஹம்பியை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த காலத்தில் கட்டக்கலை அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டது." இக்கூற்று பொருந்துமோ என ஆராய்க.

*****